முற்பகல் 11-25

மாண்புமிகு திரு. க.க. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த செலவில் பொருட்காட்சிகளை நடத்தி இலாபம் அடைகின்ற நோக்கத்தோடு இன்று புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரையைப் பெற்று ஒவ்வோர் இடத்திலும் பொருட்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று இந்த அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்துவதற்குண்டான சூழ்நிலையை உருவாக்குவதற்கு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 289, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

289—

பழவேற்காடு ஏரி

***20596—திரு. ஏ.எஸ். கண்ணன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, பழவேற்காடு ஏரி முகத்துவாரம் தூர்ந்து போய் தண்ணீர் வரத்து நின்றுவிட்டதால், மீனவர்கள் மீன்பிடிக்க இயலாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், முகத்துவாரத்தை உடனடியாக தூர்வார அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்று அரசியல் தலைவர்கள் வீர வசனம் பேசிக்கொண்டு இருக்கின்ற இந்தக் காலக்கட்டத்திலே, சொன்னதைச் செய்து முடிக்கின்ற நமது முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பழவேற்காடு ஏரி முகத்துவாரத்தைத் தூர்வார 30 இலட்சம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2002 மே 3]

ரூபாயை இந்தத் திட்டத்திற்காக ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையிலே நேற்று எனது மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இதை அறிவித்துள்ளேன். இந்த ஆண்டு இந்தப் பணி தொடங்கப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ.எஸ். கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதி, பழவேற்காடு பகுதி மீனவ சமுதாய மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை ஏற்கப்பட்டு, நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, காலத்தைக் கடத்தாமல் உடனடியாக போர்க்கால நடவடிக்கையில் தூர்வாருவதற்கான ஏற்பாட்டினைச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் இருபுறமும் தடுப்புச் சுவர் அமைப்பதற்கான நடவடிக்கையினை அரசு எடுக்குமா, அமைச்சர் செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொல்கின்றபோதே நிச்சயமாக இந்தப் பணி விரைவில் தொடங்கப்படும் என்று சொல்லிவிட்டேன். தடுப்புச் சுவர் கட்டுவதற்கான ஏற்பாடுகளும் இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று சிந்திக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]